**Source:** *Tamil Murasu,* Front Page
**Date:** 13 June 2023

# லாரன்ஸ் வோங்: வாழ்வில் வெற்றி என்பது அவரவரைப் பொறுத்தது

அரசாங்கம், சிங்கப்பூரர்கள் இடையே கடந்த ஓராண்டாக நடைபெற்றுவரும் கலந்துரையாடல் மூலம் புத்துணர்ச்சி பெற்ற, கட்டிறுக்கமான சமுதாயம் என்பது குறித்து ஒருமுகமான சிந்தனை உருவாகியுள்ளது என்று துணைப் பிரதமர் லாரன்ஸ் வோங் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய கட்டிறுக்கம் வாழ்வில் வெற்றி, திறன்கள் குறித்து ஒரு புதிய கண்ணோட்டத்தை மையமாகக்கொண்டது. அந்தக் கண்ணோட்டம், திருத்தியமைக்கப்பட்ட சமூக ஆதரவுடன் ஒற்றுமையுணர்வு பற்றிய புதிய சிந்தனையையும் கொண்டிருக்கும் என்றார் திரு வோங்.

பொதுக் கொள்கை ஆய்வுக் கழகத்தின் 35வது ஆண்டுநிறைவில் பேசிய திரு வோங், சிரமமான வெளிநாட்டுச் சூழலில் உள்ளூரில் நாம் எதிர்நோக்கும் சவால்களையும் மீண்டும் வலியுறுத்தினார்.

எனினும், வாழ்வில் வெற்றி என்பதை அவரவர் முடிவு செய்துகொள்ள வேண்டும். இதில் குறிப்பிட்ட ஓர் அளவுகோல் இல்லை என்றும் அவர் விளக்கினார்.

ஆழமாகப் பதிந்திருக்கும் மனப்போக்கை மாற்றுவது அவசியம். ஆனால், அது எளிதான ஒன்றல்ல என்றார் அவர்.

மேலும், தகுதி அடிப்படை என்பது வாழ்வின் ஆரம்பகாலத்தில் பெறும் பள்ளிக்கல்வியுடன் முடிந்துவிடுவதில்லை. மாறாக, தகுதி அடிப்படை என்பது தொடர்ச்சியான ஒன்று என்றும் அது வாழ்வின் பல்வேறு கட்டங்களில் கிடைக்கப் பெறும் கற்கும் வாய்ப்புகளுடன் இணைந்த ஒன்று என்றும் அவர் கூறினார்.

சமூக ஆதரவைப் பொறுத்தவரையில், பாதிக்கப்படக்கூடிய பிரிவினர் தங்களின் சூழ்நிலைகளைத் தாங்களே கட்டுக்குள் கொண்டுவந்து அதை விரைந்து சமாளிப்பதில் தாங்களே பொறுப்பேற்றுக்கொள்ளும் வகையில் சிங்கப்பூர் அதன் சமூகப் பாதுகாப்புக் கட்டமைப்பை வடிவமைப்பதில் கவனமாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

> “வாழ்வில் வெற்றி என்பது வசதிகளைப் பொறுத்தது என்பதைவிட வெற்றி என்றால் என்ன என்பதைப் பற்றியது. அவரவர் தமக்கென்று அமைத்துக்கொள்ளும் வாழ்க்கைப் பாதையைப் பொறுத்து ஒவ்வொருவரின் வெற்றியையும் மதிக்க வேண்டும்.
>
> **துணைப் பிரதமர் லாரன்ஸ் வோங்**

சிங்கப்பூர் நிலையற்ற, கணிக்க முடியாத சூழலை எதிர்கொள்வதால், நடுத்தர மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் பின்தங்கிவிடாமல் இருக்க அரசாங்கம் அதிகம் செய்யும் என்றார் அவர்.

ஒற்றுமை உணர்வைப் பொறுத்தவரை, “நாம்”, “நமது”, “நம்முடையது” என்பதே சமூகத்திற்கு அதிகம் தேவை. எவரும் தனியாக வெற்றி பெறுவதில்லை. ஒவ்வொரு வெற்றிக் கதையும் பகிரப்பட்ட கதை. நாங்கள் அனைவரும் எங்களுக்கு முன் வந்தவர்களின் தோள்களில் நிற்கிறோம்,” என்று திரு வோங்கூறினார்.

ஒவ்வொரு குழுவும் அதன் வேரையும் அடையாளத்தின் ஒரு பகுதியான பண்பாடு, மரபுகளையும் கொண்டாட வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. அதே வேளையில், தங்கள் சொந்த சமூகங்களைத் தாண்டி சிங்கப்பூரர்களாக பொதுவான சிந்தனையை விரிவுபடுத்த அனைவரையும் ஊக்குவிக்கிறது என்றும் அவர் கூறினார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.

NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 13 June 2023

# எடுசேவ் விருதுகள் இனி விரிவுபடுத்தப்படும்: அமைச்சு

மாணவர்கள் கல்வியில் சிறப்புத் தேர்ச்சி பெற ஊக்குவிக்கும் நோக்கில் கல்வி அமைச்சு எடுசேவ் விருதுகளை வழங்கி வருகிறது.

அவ்விருதுகள் இனி பள்ளிக்கும் சமுதாயத்திற்கும் பங்களித்துள்ள மாணவர்களையும் அங்கீகரிக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட இருக்கின்றன.

கல்வி அமைச்சர் சான் சுன் சிங் நேற்று அதனைத் தெரிவித்தார்.

முதலில் பாடங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களை அங்கீகரிக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட அவ்விருதுகள் காலப்போக்கில் துணைப்பாட நடவடிக்கைகள் தொடர்பிலும் வழங்கப்பட்டன என்பதை அமைச்சர் சுட்டினார்.

கொள்கை ஆய்வுக் கழகத்தின் 35ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற கருத்தரங்கில் திறன்தகுதி குறித்த கலந்துரையாடலில் அமைச்சர் சான் அவ்வாறு குறிப்பிட்டார்.

ஒருவரின் சாதனைகள் மட்டுமே வெற்றி என்று கருதாமல் பங்களிப்பிற்காகவும் ஒருவரை வெற்றியாளராக கௌரவிக்கலாம் என்பதை வலியுறுத்தும் சமுதாயமாகத் தாம் சிங்கப்பூரைக் காண விரும்புவதாக அவர் கூறினார்.

“ஏழை, பணக்காரர், கல்விமான், படிக்காதவர் என்ற பேதங்களின்றி யார் வேண்டுமானாலும் சமுதாயத்திற்குப் பங்களிக்க முடியும்.

“அந்தப் பங்களிப்பு அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு அமைவது அவசியம்,” என்று திரு சான் வலியுறுத்தினார்.

வெற்றி, திறன்தகுதி ஆகியவற்றின் பொருளை மறுவரையறை செய்ய வேண்டியதன் தேவை குறித்து அவர் கூறினார்.

சிங்கப்பூர் எதிர்கொள்ளும் புதிய சவால்கள், சமூகத்தில் அதிகரிக்கும் வேற்றுமைகள் ஆகியவற்றுக்கிடையே வெற்றி, திறன்தகுதி ஆகியவற்றை மறுவரையறுக்க வேண்டியது அவசியமாகிறது என்று அமைச்சர் எடுத்துரைத்தார்.

சிங்கப்பூரில் வெற்றி என்பது ஒரு குழு முயற்சியாக அமைய வேண்டும். அது ஒரு குழு விளையாட்டு. அவரவர் தனக்கான பந்தயத்தில் தனிப்பட்ட முறையில் ஓடுவது அன்று,” என்றார் அவர்.

சமூகத்தின் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தோர், தங்கள் சொந்த சாதனைகளுக்கும் அப்பால், இயன்றவரையில் ஆகச் சிறந்த பங்களிப்பை வழங்க வேண்டும். அவர்களின் ஒட்டுமொத்த பங்களிப்பே திறன் தகுதியை நிர்ணயிக்கும் என்று அமைச்சர் சொன்னார்.

திறன்தகுதி என்ற அம்சம் சிங்கப்பூருக்கு கடந்த 50 ஆண்டுகளாக வெற்றி ஈட்டித் தந்ததாகத் திரு சான் கூறினார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.